பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

08. 01 .2025 6. 45
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. மாணவர்களிடையே தேர்வு பற்றிய அச்சத்தை போக்குவதற்கு கலைகள் பேருதவியாக இருக்கும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
2. இஸ்ரோவின் புதிய தலைவராக திரு வி நாராணயன் நியமிக்கப்பட்டுள்ளார்.
3. சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் தமிழக வீரர்களுக்கு மாநில அரசு உதவி அளிக்கும் என துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
4. ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கு மூன்று நாட்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்ய முடியும் என மாவட்ட தேர்தல் அதிகாரி அறிவித்துள்ளார்.
5. கோ-கோ உலகக்கோப்பை போட்டிகள் புதுதில்லியில் வரும் 13-ஆம் தேதி முதல் 19-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளன.

<u>*-- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

மாணவர்களிடையே தேர்வு பற்றிய அச்சத்தை போக்குவதற்கு கலைகள் பேருதவியாக இருக்கும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற தேர்வு வீரர்கள் கலைத் திருவிழா குறித்த சமூக வலைதளப் பதிவுக்கு பதிலளித்துள்ள பிரதமர், இந்த திருவிழாவில் ஏராளமான இளைஞர்கள் ஒன்றிணைந்து, பொதுத் தேர்வுகளை மன அழுத்தமின்றி எதிர்கொள்வதற்கு கலை எந்த அளவிற்கு வலிமையான சக்தியாக திகழ்கிறது என்பதை எடுத்துக் காட்டியிருப்பதாகக் கூறியுள்ளார்.

இந்த திருவிழாவில் 30 பள்ளிகளைச் சேர்ந்த ஒன்பதாம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் தங்களது படைப்பாற்றல் திறனை வெளிப்படுத்தி இருந்தனர்.

**[]<<<>>>[]**

நாடு முழுவதும் ஓட்டுநர் பயிற்சி மையங்களை அமைக்க ஊக்கத்தொகை வழங்கப்படும் என மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஒருங்கிணைந்த தானியங்கி சோதனை மையம் மற்றும் ஓட்டுநர் பயிற்சி மையங்களை அமைக்க கூடுதல் ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று கூறினார்.

நாட்டில் தற்போது திறன் பயிற்சி பெற்ற ஓட்டுநர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதால், கூடுதல் ஓட்டுநர் பயிற்சி பள்ளிகளை நிறுவ அரசு உறுதி பூண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

முன்னதாக மாநில போக்குவரத்து அமைச்சர்களுடன் கலந்துரையாடிய திரு நிதின்கட்கரி, சாலை பாதுகாப்புக்கு உயர் முன்னுரிமை அளிக்குமாறு வலியுறுத்தினார்.

**[]<<<>>>[]**

தமிழக சட்டப்பேரவைத் தலைவர் திரு அப்பாவு சென்னையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பின்போது கேள்வி கேட்ட பத்திரிகையாளர்கள் தடுக்கப்பட்டதற்கு மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், இந்த பத்திரிகையாளர் சந்திப்பின்போது டி டி தமிழ் தொலைக்காட்சியின் செய்தியாளர் மற்றும் ஒளிப்பதிவாளர் தரக்குறைவாக நடத்தப்பட்டதாக குற்றம்சாட்டியுள்ளார்.

இதற்குக் காரணமான செய்தித்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

செய்தியாளர்கள் என்ன கேள்வி கேட்க வேண்டும் என்பதை அரசு நிர்வாகத்தில் இருப்பவர்கள் முடிவு செய்ய தொடங்கி விட்டால், ஜனநாயகம் கேள்விக்குறியாகும் என்றும் திரு எல் முருகன் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

இந்திய விண்வெளி ஆய்வு மையம் இஸ்ரோவின் புதிய தலைவராக திரு வி நாராணயன் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போதைய தலைவர் திரு சோம்நாத்தின் பதவிக்காலம் முடிவடைவதையடுத்து, கேரளாவில் உள்ள திரவ எரிபொருள் மையத்தில் இயக்குநராக பணியாற்றி வரும் திரு நாராயணன், இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் விண்வெளித்துறையின் செயலாளராகவும் பதவி வகிப்பார் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

திரு நாராயணன் வரும் 14-ஆம் தேதி இஸ்ரோ தலைவர் பொறுப்பை ஏற்கவுள்ளார்.

[]<<<>>>[]

சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் தமிழக வீரர்களுக்கு பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக்கூடாது என்பதில் மாநில அரசு உறுதியுடன் உள்ளதாக துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை நேரு விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், சர்வதேச, ஆசிய மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற ஆயிரத்து 21 வீரர் வீராங்கனைளுக்கு ஊக்கத்தொகையாக 26 கோடியே 69 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை அவர் வழங்கினார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், விளையாட்டுத் துறையில் சிறந்த விளங்குவோருக்கு தமிழக அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் வேலைவாய்ப்பில் மூன்று சதவீத இடஒதுக்கீடு வழங்கப்படுவதை சுட்டிக்காட்டினார்.

திருச்சியில் 50 கோடி ரூபாய் செலவில் ஒலிம்பிக் அகாடமிக்கு அடிக்கல் நாட்டப்பட்டிருப்பதாகக் கூறிய அவர், திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் புதிய விளையாட்டு வளாகம் அமைக்கப்படும் என்று தெரிவித்தார்.

இந்தியாவிலேயே முதல் முறையாக ராமநாதபுரத்தில் 43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒலிம்பிக் நீர் விளையாட்டு அகாடமி அமைக்கப்பட உள்ளதாவும் திரு உதயநிதி ஸ்டாலின் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் மாநில அரசு உறுதுணையாக இருக்கும் என தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் திரு மு பெ சாமிநாதன் கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற விழாவில், தமிழ்த்தாய் விருது,

உ வே சா விருது, கம்பர் விருது உள்ளிட்ட 16 விருதுகளையும், சிறந்த மொழி பெயர்ப்புக்கான விருதுகளை பத்து பேருக்கும் அவர் வழங்கினார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர், தமிழறிஞர்களின் இடைவிடாத தொண்டிற்கும், அவர்களது திறமைக்கும் ஊக்கம் அளிக்கும் வகையிலேயே இந்த விருதுகள் வழங்கப்படுவதாகத் தெரிவித்தார்.

[]<<<>>>[]

ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் வரும் பத்தாம் தேதி தொடங்க உள்ள நிலையில், மூன்று நாட்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்ய முடியும் என மாவட்ட தேர்தல் அதிகாரி திரு ராஜகோபால் சுங்கரா தெரிவித்துள்ளார்.

ஈரோட்டில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பொங்கல் பண்டிகையையொட்டி தொடர் விடுமுறை வருவதால் வரும் 10, 13, 17 ஆகிய தேதிகளில் மட்டுமே வேட்பு மனுக்கள் பெறப்படும் என்று கூறினார்.

*( சவுண்ட்பைட் - ராஜகோபால் சுங்கரா ) ----50 செகண்ட்*

[]<<<>>>[]

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மதுரை மாவட்டத்தில் நடைபெறவுள்ள தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டுப் போட்டிகளில் பங்கேற்க ஐயாயிரத்து 347 மாடுபிடி வீரர்களும், 12 ஆயிரத்து 632 காளைகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அவர்களின் ஆவணங்களை மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் சரிபார்க்கப்பட்ட பின் தகுதியான நபர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - ரகுராஜா ) --- 48 செகண்ட்*

[]<<<>>>[]

நேபாள – திபெத் எல்லையில் நேற்று நேரிட்ட நிலநடுக்கத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 126-ஆக அதிகரித்துள்ளது.

[]<<<>>>[]

தென்கொரியாவில் பதவி நீக்கம் செய்யப்பட்ட அதிபர் திரு யூன் சுக் யியோலை கைது செய்வதற்கான அவகாசத்தை நீட்டித்து அந்நாட்டு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

[]<<<>>>[]

இந்தோனேஷியாவின் மவுண்ட் இபு எரிமலை வெடிப்பு காரணமாக அப்பகுதியில் விமானங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

பிரம்மபுத்ரா ஆற்றின் குறுக்கே இந்திய எல்லையையொட்டி சீனா புதிய அணை கட்டும் திட்டம் உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டு வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

ஜம்மு-கஷ்மீரில் உத்தம்பூர் - பாரமுல்லா ரயில் வழித்தடத்தில் கத்ரா – ரியாஷி பிரிவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பாதையில் ரயில்வே பாதுகாப்பு ஆணையர் சோதனை சோதனை நடத்தியுள்ளார்.

[]<<<>>>[]

மகாராஷ்டிராவில் பொதுமக்களின் குறைகளுக்கு தீர்வுகாண ஏழு அம்ச செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு அம்மாநில முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவிஸ் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

[]<<<>>>[]

சென்னையை அடுத்த முட்டுக்காடு படகு இல்லத்தில் ஐந்து கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள மிதவை படகு உணவகத்தை மாநில அமைச்சர்கள் திரு தா மோ அன்பரசன், திரு ராஜேந்திரன் ஆகியோர் நேற்று தொடங்கி வைத்தனர்.

[]<<<>>>[]

திருப்பத்தூர் மாவட்டத்தில் பள்ளி மாணவர்களின் நலன் கருதி அரசு வழிகாட்டு விதிமுறைகளை பின்பற்றுதல் தொடர்பாக பள்ளிக்கல்வித்துறை உயரதிகாரிகளுடன் ஆட்சியர் திரு தர்ப்பகராஜ் நேற்று ஆலோசனை நடத்தினார்.

[]<<<>>>[]

தேனி மாவட்டத்தில் யானைக் கூட்டம் விளை நிலங்களுக்குள் வருவதை தடுக்க வனத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

[]<<<>>>[]

விழுப்புரத்தில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மகளிர் சுய உதவிக்குழுக்களால் தயாரிக்கப்பட்ட பொருட்களின் கண்காட்சி மற்றும் விற்பனை நேற்று தொடங்கியது.

[]<<<>>>[]

சென்னையில் போகி பண்டிகையின்போது சுற்றுச்சூழல் மாசுபடுவதை தடுக்கும் வகையில் பொதுமக்கள் பிளாஸ்டிக் பொருட்கள், டயர் மற்றும் பழைய துணிகளை எரிப்பதை தவிர்த்து தூய்மைப் பணியாளர்களிடம் ஒப்படைக்குமாறு மாநகராட்சி நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.

[]<<<>>>[]

கோ-கோ உலகக்கோப்பை போட்டிகள் புதுதில்லியில் வரும் 13-ஆம் தேதி முதல் 19-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளன.

இந்த போட்டியின் ஏ- பிரிவு ஆட்டத்தி.ல் இந்தியா, இலங்கை, அமெரிக்க, பிரேசில், நேபாளம், உள்ளிட்ட 20 ஆடவர் அணிகளும், 19 மகளிர் அணிகளும் பங்கேற்கவுள்ளன.

**[]<<<>>>[]**

நியூயார்கில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Rushil khosla –** ருமேனியாவின் எரிக் டேவிட் வெர்டஸ் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அந்த இணை, கனடாவின் மைக்கேல் **Arseneault –** நிகோலஸ் **Arseneault** - இணையை 7-6, 6-1 என்ற செட் கணக்கில் வென்றது.

***End of News***